2010 நவம்பர் 12] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

பார்க்கக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. எனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள் சொன்னதுபோல மாநில அரசோ, மத்திய அரசோ இதைப்பற்றி கண்டுகொள்ளாமல் இல்லை. கடல் கடந்த நாடுகளில் இருக்கின்ற சட்டங்களைத் திருத்திக்கூட தமிழர்களை மீட்டு வர வேண்டும் என்பதிலே நம்முடைய முதலமைச்சர் அவர்களும் (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மத்திய அரசும் உறுதியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) நாகப்பட்டினம் மாவட்டம், பிள்ளைப்பெருமாநல்லூர் மின் நிலைய விரிவாக்க கருத்துக் கேட்புக் கூட்டத்தில் வன்முறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்டம், பொறையாறு அருகில் உள்ள பிள்ளைபெருமாநல்லூர் என்னும் கிராமத்தில் தனியார் அனல் மின் நிலைய விரிவாக்கத்திற்கான கருத்துக் கேட்புக் கூட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், மாசுக் கட்டுப்பாடு வாரியமும் நடத்தியபொழுது அப்பகுதியில் வாழ்கின்ற மீனவ மக்களும், மீனவர் அமைப்புகளும், அப்பகுதியில் வாழ்கின்ற பொதுமக்களும் தங்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்கிற கருத்தினை மாசுக் கட்டுப்பாடு வாரிய அலுவலரிடத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் முறையிடச் சென்றிருக்கிறார்கள். அந்த நேரத்தில் ஏற்கெனவே திட்டமிட்டு அந்த தனியார் மின் நிலையத்தின் சார்பில் சில rowdy கும்பல்களும், வன்முறையாளர்களும் அப்பாவிப் பொதுமக்கள்மீது சரமாரியாக உருட்டுக்கட்டைகளாலும், கம்பிகளாலும் தாக்கியதில் சில பேர் மண்டை உடைக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

ஏற்கெனவே இது போன்று ஒரு அனல் மின் நிலையத்தை கடலூர் மாவட்டத்தில் ஏற்படுத்த முயற்சித்தபோது மாவட்ட ஆட்சித் தலைவர் நடத்திய கருத்துக் கேட்புக் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவரை பொதுமக்கள் தாக்க முயற்சித்தார்கள் என்று 300 பேர்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்துவது அரசு. அரசு அழைக்கின்ற கூட்டதை நம்பிச் செல்கின்ற பொதுமக்கள் இதுபோன்று தனியார் அனல் மின் நிலையத்திற்கு ஆதரவான வன்முறைக் கும்பல்களால்

[திரு. தி. வேல்முருகன்] [2010 நவம்பர் 12

தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுவது, வழக்குகள் பதிவு செய்யப்படுவது என்பது ஜனநாயக நாட்டில் ஏற்புடையதல்ல. அந்தக் கூட்டத்தில் உள்ளே புகுந்து rowdyism-த்தில் ஈடுபட்டவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் இந்த நேரத்திலே அறிய விரும்புவதோடு, இதுபோன்ற பிரச்சினைகள் இனி தமிழகத்தில் நடைபெறாதவண்ணம் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, அப்பகுதி மக்களுக்கு ஏற்படுகின்ற அச்சுறுத்தல்களை, பிரச்சினைகளை எடுத்துச் சொல்கின்றபோது அவர்கள்மீது வழக்குப் பதிவு செய்கின்ற நிலையையும் அரசு கைவிட வேண்டும் என்கிற மிக முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்சினைமீது பேரவைத் தலைவர் வாயிலாக அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கிறார்களா என்று பார்த்து அந்த அமைச்சருடைய Subject தானா என்று பார்த்த பின்புதான் கூப்பிட முடியும். உட்காருங்கள்.*

முற்பகல் 9-40

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய மின் நிலையங்களை அமைக்கும்போது சுற்றுச்சூழல் certificate வாங்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதற்காக கருத்துக் கேட்புக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. அதிலே வேண்டுமென்றே, திட்டமிட்டு, சில சமுதாய விரோதிகள் அந்தப் பகுதிகளிலே அந்த மின் நிலையங்கள் வரக்கூடாது என்பதற்காக இப்படிப்பட்ட கலவரங்களிலே ஈடுபடுகிறார்கள். அதேநேரத்தில் அங்கே நிலச் சொந்தக்காரர்கள் எப்படியும் இந்த மின் நிலையம் வரவேண்டும், இந்தப் பகுதியிலே வேலைவாய்ப்பில்லா பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும், இந்தப் பகுதி முன்னேற வேண்டும், பொருளாதாரரீதியாக முன்னேற வேண்டும் என்று நினைக்கின்றவர்கள் எல்லாம், அவர்களோடு மோதிக்கொள்கிறார்கள். இப்படி நிலச் சொந்தக்காரர்கள், திட்டங்கள் வரவேண்டுமென்று நினைப்பவர்கள் ஒரு பக்கத்திலே; இன்னொரு பக்கத்திலே இதற்கு எதிர்ப்பாக இருக்கக்கூடியவர்கள், இவர்களுக்கு மத்தியில் நடைபெறுகின்ற இந்தத் தகராறில் காவல் துறை சட்டப்படி யார்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமோ, அவர்கள்மீது உரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

2010 நவம்பர் 12]

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதியில்லை. பதில் சொல்லியாகிவிட்டது என்றால் முடிந்தது. (குறுக்கீடு) No clarification, உட்காருங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம், நீங்கள் ஏதாவது கேட்கவேண்டுமென்றால் கேளுங்கள். (குறுக்கீடு) திரு. வேல்முருகன், உட்காருங்கள். பிரச்சினை பண்ணாதீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். சொல்லியாகிவிட்டதல்லவா? வாய்ப்புக் கொடுத்த பிறகும் இப்படி இடைஞ்சல் செய்தீர்கள் என்றால் எப்படி?

(ஆ) கத்தார் நாட்டு சிறையிலுள்ள தமிழக மீனவர்களை மீட்க நடவடிக்கை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ. பன்னீர்செல்வம், என்னவோ கேட்கப் போகிறேன் என்று சொன்னீர்களே! (குறுக்கீடு) இல்லை, இல்லை, ஒன்று சொல்கிறேன் கேளுங்கள்; சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் இருந்தால் மட்டும் கேளுங்கள், சும்மா vagueஆகக் கேட்பதில் பயனில்லை. (குறுக்கீடு) நீங்கள் ஒன்றும் கேட்கவில்லையா? (குறுக்கீடு)

திரு. ஓ. பன்னீர்செல்வம்: சம்பந்தப்பட்ட அமைச்சர் இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ. பன்னீர்செல்வம், சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: நம்முடைய கன்னியாகுமரி மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த மீனவர்கள் கத்தார் சிறையிலே வாடிக் கொண்டிருக்கிற தகவலை இங்கே சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு சிறிய வேண்டுகோள். நீங்கள் சொல்வதற்குப் பதில் அளிக்க வேண்டுமென்றால் மாண்புமிகு முதலமைச்சர் இருக்க வேண்டும்; மாண்புமிகு முதலமைச்சர் இங்கு இல்லை.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் இருக்கிறார்.